DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**O.S. No.14/2022**

Deposition of Witness : P.W.3

Name - **திரு.சுரேஷ்பாபு** Father's Name - **திரு.**

Village - Taluk-
Caste - Calling -
Religion - Age-

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **09.04.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை** –

1. நான் திருநெல்வேலியில் மருத்துவராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எனது சொந்த ஊர் நோச்சிகுளம். இந்த வழக்கின் வாதி வில்சன் எனது தந்தை. இந்த வழக்கில் பிரதிவாதிகளான குருசாமி மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர் பத்ரகாளிபுரத்தில் குடியிருந்து வருகிறார்கள், அவர்கள் எங்களுக்கு உறவு முறையில் உறவினர்கள் வெகு நாட்களாக பழக்கம்.

2. பிரதிவாதிகளும் எங்களை திருநெல்வேலிக்கு பார்ப்பதற்கு வருவார்கள் நாங்களும் அவர்களை தேனிக்கு பார்ப்பதற்கு வருவோம். அந்த வகையில் எனக்கு தேனி மாவட்டம் மிகவும் பிடித்திருந்த காரணத்தினால் தேனி மாவட்டத்தில் ஒரு இடம் வாங்கலாம் என்று பிரதிவாதிகளிடம் தெரிவித்திருந்தேன். பத்திரகாளிபுரத்தில் உள்ள அவர்களது வீட்டை விற்க இருப்பதாக பிரதிவாதிகள் தெரிவித்தார்கள். எனது அப்பாவிடம் இது பற்றி தெரிவித்தேன், அவர் வாங்கித் தருவதாக சொல்லி இருந்தார். இது சம்பந்தமாக கிரையம் பேசி முடித்து கடந்த 06.08.2021–ம் தேதியன்று ரூ.21 லட்சம் ரூபாய்க்கு கிரையம் பேசி, ரூ.20 லட்ச ரூபாய் முன்பணம் தரப்பட்டது.

3. அந்த ரூ.20 லட்சம் பணம் பணமாக பத்திர அலுவலகத்தில் வெளியில் வைத்து கொடுக்கப்பட்டது. எனது அப்பாவும் கொஞ்சம் பணம் வைத்திருந்தார் நானும் கொஞ்சம் பணம் ஏற்பாடு செய்து தந்தேன் இருவரும் சேர்ந்து அந்த 20 லட்ச ரூபாய் பணத்தை தயார் செய்து பிரதிவாதிகளுக்கு கொடுத்தோம். இரண்டு வருடங்களுக்குள் ஒப்பந்தம் நிறைவேற்றி கிரையம் பதிவு செய்து கொள்வதாக பேசிக் கொண்டோம். பாக்கி ஒரு லட்ச ரூபாய் பணம் கிரையம் முடியும்போது வாங்கிக் கொள்வதாக பிரதிவாதிகள் சொன்னார்கள் அவர்களுக்கு நிறைய கடன் இருப்பதாகவும் இந்த ரூ.20 லட்ச முன்பணத்தை வாங்கி அவர்கள் கடன்களை அழைத்து கிரையம் முடித்து தருவதாக சொன்னார்கள்.

4. அதன் பிறகு பிரதிவாதிகளை நாங்கள் பலமுறை அணுகி பார்க்கும் பொழுது அவர்கள் வீடு அடைத்திருந்தது அவர்கள் கிரையம் செய்து தர முன்வரவில்லை. எனவே எனது அப்பாவுடன் கலந்து பேசி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். கிரையம் செய்து தர ஒப்புக்கொண்ட இடம் வீடு, அதில் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள். என்னிடம் காண்பிக்கக் கூடிய வா.த.சா.ஆ.1. தான் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம், அதில் நானும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன், அந்த ஆவணம் தான் வா.த.சா.ஆ.1.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.09 16:51:23 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.